**Sub Court, Eraniel**

**E.P.6/25**
**in**
**MCOP.No.37/21**

Date: 14.11.2025.

ம.சா.1 - திரு.சதீஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தின் விபரங்கள் எனக்கு தெரியும். எனக்கு ஏற்பட்ட விபத்தில் நான் செய்த மருத்துவசெலவிற்காக இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறேன். இந்த இ.பி மனுவை நான் முன்பு எனக்கு நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த MCOP எண் மற்றும் அது உத்தரவான தேதி எனக்கு நினைவில் இல்லை. MCOP உத்தரவானது ஒருதலைபட்சமான உத்தரவு என்றால், அதில் என்னை விசாரித்தார்கள். மற்ற விபரங்கள் நினைவில் இல்லை. மேற்படி MCOP உத்தரவு 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வாராதரப்பினர் ஆக்கப்பட்ட உத்தரவு என்றால், அதுவிபரம் எனக்கு நினைவில் இல்லை. இந்த இ.பி மனு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. இந்த இ.பி மனுவில் 1 எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்து பார்த்தேன். அதன் படி 1ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்ச உத்தரவை எதிர்த்து மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. எனவே இந்த மனு நிலைக்க தக்கதல்ல என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.